மோட்டார் வாகனங்கள் விபத்து இழப்பீட்டுக் கோருரிமைத் தீர்ப்பாயம், சென்னை

(I சிறப்பு நீதிமன்றம், சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை)

முன்னிலை : திருமதி. கே. சுஜாதா, பி.ஏ., பி.எல்.,

I சிறப்பு நீதிபதி, சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4ம் நாள் புதன்கிழமை

மோ.வா.வி.இ.கோ.தீ. மனு எண். 2650/2021

(CNR No. TNCH09-003972-2021)

1. Senthurpandian (Died)
   S/o. Shanmugavel

2. Rajalakshmi
   D/o. Senthurpandian

3. Dhanalakshmi
   D/o. Senthurpandian

4. Manikandan
   S/o. Senthurpandian

5. Saravanan
   S/o. Senthurpandian

அனைவருடைய முகவரி :-

No.1, Mamuthu Street,
Ashok Nagar, S.M.Nagar PO,
Avadi, Chennai - 600 048.

(Amended as per order passed in MP No. 7/2024 dated 02.08.2024)
(Amended as per order passed in MP No. 9/2024 dated 12.11.2024)

.... மனுதாரர்கள்

//எதிராக//

1. M/s. AVK Travels,
   NO.28/2, Poonamallee High Road,
   Vanagaram, Chennai - 600 045.

2. United India Insurance Co. Ltd.,
   No.134, Greams Road,
   IV Floor, Anna Salai,
   Chennai - 600 006. .... எதிர்மனுதாரர்கள்

SUJATHA Digitally signed by SUJATHA

இம்மனு 23.01.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் M/s. M.Malar மற்றும் F.Terry Chella Raja அவர்களும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு/திருமதி. P.Sankaranarayanan மற்றும் R.Rajesh அவர்களும் ஆஜராகி, 1ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகததால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

உத்தரவு

1. 1988 வருட மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 166 மற்றும் மோட்டார் வாகன விதி 3ன் கீழ் இம்மனுவானது மோட்டார் வாகன விபத்தில் இறந்து போன 1ம் மனுதாரர் / சென்தூர்பாண்டியன் என்பவரின் இறப்பிற்கு ரூ.43,00,000/- இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது.

2. மனுவின் சுருக்கம்:-

கடந்த 16.03.2021 ஆம் தேதி 11.40 மணியளவில் 1ம் மனுதாரர் NL 01 B 1491 என்ற பதிவு எண் கொண்ட பேருந்தில் பயணியாக தூத்துக்குடி - மதுரை நெடுஞ்சாலை, ஸ்ரீசெளடாம்பிகா இன்ஜீனியரிங் கல்லூரி அருகில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது, மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து சாலையில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 1ம் மனுதாரர் மற்றும் பலருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டது. மேலும் பேருந்தில் பயணம் செய்த ஒரு நபர் இறந்துவிட்டர். இந்த விபத்து பேருந்து ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது. 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. விபத்தில் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பினை எதிர்மனுதாரர்கள் வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

SUJATHA Digitally signed by SUJATHA

3. 2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்படும் எதிருரை மற்றும கூடுதல் எதிருரையின் சுருக்கம் :-

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறானது, அற்பமானவை. இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். 1ம் மனுதாரரின் வயது, தொழில், முகவரி மற்றும் விபத்து நடந்த விதம் போன்றவற்றை இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை. மனுதாரர்கள் சொல்வதுபோல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்றும், விபத்தில் காயம்பட்ட 1ம் மனுதாரர் 20 மாதங்கள் கழித்து இறந்துள்ளார் என்பதால் அவர் விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் இறக்கவில்லை என்றும், மேலும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை வாகன ஒட்டுநருக்கு விபத்து சமயத்தில் முறையான ஒட்டுநர் உரிமம் இல்லை என்றும், அவர் காப்பீட்டு விதிகளை மீறி செயல்பட்டு இருப்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்று கோரியுள்ளார்.

4.இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனைகள் யாதெனில்,

1. இந்த விபத்தானது NL 01 B 1491 என்ற பதிவு எண் கொண்ட பேருந்து ஓட்டுனரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதா? இல்லையா?
2. இந்த மனுவில் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரா?
3. விபத்தில் காலமான நபர் விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் இறந்துள்ளாரா?
4. மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் எவ்வளவு கிடைக்கக்கூடியது?

5. இம்மனுவில் மனுதாரர் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.25 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரணை செய்யப்படவில்லை மற்றும் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

SUJATHA Digitally signed by SUJATHA

6. பிரச்சனை – 1க்கான தீர்வு:-

i. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் கடந்த 16.03.2021 ஆம் தேதி 11.40 மணியளவில் 1ம் மனுதாரர் NL 01 B 1491 என்ற பதிவு எண் கொண்ட பேருந்தில் பயணியாக தூத்துக்குடி - மதுரை நெடுஞ்சாலை, ஸ்ரீசௌடாம்பிகா இன் ஜீனியரிங் கல்லூரி அருகில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது, மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து சாலையில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்றும் இந்த விபத்தில் 1ம் மனுதாரர் மற்றும் பலருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டது என்றும், மேலும் பேருந்தில் பயணம் செய்த ஒரு நபர் இறந்துவிட்டர் என்றும், இந்த விபத்து பேருந்து ஓட்டுநரின் அதிவேகம் மற்றும கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றும், விபத்தினால் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு உரிய இழப்பீடு வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டுமென குறிப்பிட்டு வாதிட்டார்.

ii. 2ம் எதிர்மனுதாரர் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் மனுதாரர்கள் சொல்வதுபோல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்றும், விபத்தில் காயம்பட்ட 1ம் மனுதாரர் 20 மாதங்கள் கழித்து இறந்துள்ளார் என்பதால் அவர் விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் இறக்கவில்லை என்றும், மேலும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை வாகன ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அவர் காப்பீட்டு விதிகளை மீறி செயல்பட்டு இருப்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்று குறிப்பிட்டு வாதிட்டார்.

iii. இருதரப்பிலும் முன்னிலைப்படுத்தப்பட்ட வாதுரைகள் மற்றும் வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. ம.சா.1ன் சாட்சியம் மற்றும் மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட மருத்துவ சான்றாவணங்கள் ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ12, ம.சா.ஆ23 மற்றும் ம.சா.ஆ24 ஆவணங்களை பரிசீலனை செய்ததில் 1ம் மனுதாரருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது என்று அறிய முடிகிறது. 1ம் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் 16.03.2021ம் தேதி ஏற்பட்ட விபத்தினால் ஏற்பட்டதா என்பது குறித்து

SUJATHA Digitally signed by SUJATHA

ஆராய்கையில், மனுதாரா்கள் தரப்பு வழக்கினை உறுதி செய்யும் வகையில், விபத்து நடைபெற்றது குறித்து பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையினை பரிசீலனை செய்ததில் 16.03.2021 அன்று நடந்த விபத்து குறித்து புகார் அளிக்கப்பட்டு அதன் அடிப்படையில் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை டவுன் காவல் நிலைய குற்ற எண். 50/2021ல் இ.த.ச பிரிவுகள் 279, 337, 304 (A) ன் கீழ் 17.03.2021 அன்று 1ம் எதிர்மனுதாரரின் NL 01 B 1491 என்ற பதிவு எண் கொண்ட பேருந்து ஓட்டுநருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. அதேபோல், ம.சா.ஆ2 இறுதி அறிக்கை நகலில் 1ம் எதிர்மனுதாரா் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்பதற்காக இ.த.ச பிரிவுகள் 279, 337 மற்றும் 304 (A)-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

மனுதாரா் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட மேற்படி ம.சா.1ன் சாட்சியமும் அதனை உறுதிபடுத்தும் வகையில் ம.சாஆ.1 முதல் தகவல் அறிக்கை நகல் மற்றும் ம.சா.ஆ2 இறுதி அறிக்கை நகலை காணும் போது மனுதாரா்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு, இந்த விபத்து NL 01 B 1491 என்ற பதிவு எண் கொண்ட பேருந்து ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் தான் ஏற்பட்டது என்பதும், இந்த விபத்தில் காலமான 1ம் மனுதாரருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பதும் திட்டவட்டமாக அறிய முடிகிறது.

ஆனால், 2ம் எதிர்மனுதாரா் தரப்பில் மனுதாரா் சொல்வதுபோல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்று விபத்து நடந்த விதம் குறித்து மறுப்பு தெரிவித்திருந்த போதிலும் அதனை நிரூபிக்கும் வகையில் வாய் மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ முன்னிலைப்படுத்தவில்லை. எனவே, மனுதாரா் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சங்கதிகளான 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை சம்பவ நாள், நேரம், இடத்தில் அதிவேகமாகவும்,

SUJATHA Digitally signed by SUJATHA

அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானித்து வினா எண்1 ற்கு விடை காண்கிறது.

7. **பிரச்சனை எண் 2க்கான தீர்வு:-**

விபத்தானது 16.03.2021 அன்று 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான NL 01 B 1491 என்ற பதிவு எண் கொண்ட பேருந்து ஒட்டுநரால் ஏற்பட்டது என்பது மேலே விவரித்த வகையில் திட்டவட்டமாக தீர்மானித்துள்ள நிலையில் மேற்படி 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான NL 01 B 1491 என்ற வாகனமானது 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், அதன் காலவரையறையானது 15.05.2020 முதல் 14.05.2021 நள்ளிரவு வரை உள்ளது என்பது மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் இருந்து அறிய முடிகிறது. இது குறித்து 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை. 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஒட்டிய வாகன ஓட்டுனருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும், மேற்கண்ட வாகனத்திற்கு ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டு கூறியிருந்த போதிலும் அதனை நிரூபிக்கும் வகையில் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ முன்னிலைபடுத்தவில்லை. எனவே, மேற்படி விபத்தில் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு, 1ம் எதிர்மனுதாரர் விபத்து வாகனத்தின் உரிமையாளர் என்ற வகையிலும், 2ம் எதிர்மனுதாரர் அதன் காப்பீட்டாளர் என்ற வகையிலும் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் ஆவர். எனவே 2ம் எதிர்மனுதாரர், 1ம் எதிர்மனுதாரரது வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற வகையில், மேற்படி சாலை விபத்தில் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கான இழப்பீட்டினை வழங்க பொறுப்பானவர் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

8. **பிரச்சனை எண் 3க்கான தீர்வு:-**

இம்மனு முதலில் 1ம் மனுதாரரால் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னர் விபத்து நடந்து 20 மாதங்கள் கழித்து 1ம் மனுதாரர் இறந்துவிட்ட படியால் அவருடைய வாரிசு தாரர்களான 2 முதல் 5ம் மனுதாரர்கள் இந்த

SUJATHA Digitally signed by SUJATHA

மனுவை இறப்பிற்கான இழப்பீடு கோரி மற்றம் செய்துள்ளார்கள். அதனால், விபத்தில் காலமான 1ம் மனுதாரர் விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் இறந்துள்ளாரா என்பது குறித்து ஆராய்கையில், விபத்தானது 16.03.2021 அன்று நடந்துள்ளது. விபத்தில் காயமடைந்த சென்தூர்பாண்டியன் என்பவர் 17.03.2021 அன்று விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பின்னர் அன்றைய தினமே விடுவிக்கப்பட்டு மதுரையில் உள்ள வேலம்மாள் மெடிக்கல் காலேஜ் மருத்துவமனையில் 17.03.2021 அன்று சிகிச்சை பெற்று பின்னர் சென்னை அரசு ராஜீவ் காந்தி மருத்துவமனையில் உள்நோயாளியாக 19.03.2021 அன்று அனுமதிக்கப்பட்டு 30.04.2021 வரை சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.

மேலும் மனுதாரர்கள் தரப்பில் சென்னை அரசு ராஜீவ் காந்தி மருத்துவமனையில் உதவி பேராசியராக பணிபுரியும திரு. டாக்டர். வினோத் என்பவரை ம.சா.2ஆக விசாரணை செய்து அவர் மூலமாக ம.சா.ஆ25 ஆக 1ம் மனுதாரரின் சிகிச்சை அறிக்கை நகல்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.2 தன் முதல் விசாரணையில், **காலமான நபருக்கு ஏற்பட்ட தலை காயத்தில் ஏற்பட்ட தொற்று காரணத்தினால் அவர் இறக்க வாய்ப்பிருக்கிறதா என்றால் வாய்ப்பு இருக்கிறது. 04.04.2021 அன்று எடுக்கப்பட்ட எம்.ஆர்.ஐ Brain மற்றும் நரம்பியல் மருத்துவர் வழங்கிய கருத்துரையில் Late subacute chronic SDH இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

1ம் மனுதாரருக்கு விபத்தினால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு அதற்காக சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்பது ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ12, ம.சா.ஆ23 மற்றும் ம.சா.ஆ24-ல் இருந்து அறிய முடிகிறது. மேலும் மனுதாரருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் 1ம் மனுதாரருக்கு ஏற்பட்ட தலைக்காயத்தில் ஏற்பட்ட தொற்று காரணத்தினால் இறப்பு ஏற்பட்ட வாய்ப்பு உள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும், நரம்பியல் மருத்துவர் வழங்கிய கருத்துரையில் 1ம் மனுதாரருக்கு **Late subacute chronic SDH** இருப்பதாக சொல்லப்பட்டுள்ளதால் அவர் இறப்பதற்கான சாத்தியகூறு அதிகமாக இருந்துவந்துள்ளது என்று தெளிவாகிறது. எனவே, 1ம் மனுதாரர் விபத்தினால் தனக்கு தலையில் ஏற்பட்ட காயத்தின் தொடர்ச்சியாக இறந்துள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதனால், இம்மனுவை இறப்பிற்கான மனுவாக கருதி அதற்கான இழப்பீட்டை வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

SUJATHA Digitally signed by SUJATHA

ம.சா.ஆ.13 வாரிசு சான்றிதழ் படி 2 முதல் 5ம் மனுதாரா்கள் காலமான 1ம் மனுதாரரின் வாரிசுதாரா்கள் என்றும் அறிய முடிகிறது. எனவே மேற்கண்ட 2 முதல் 5ம் மனுதாரா்கள் மனு இழப்பீட்டு தொகையை பெற தகுதி உடையவா் என இத்தீா்ப்பாயம் முடிவு காண்கிறது. இனி பல்வேறு தலைப்புகளின் கீழ் மனுதாரா்கள் பெறத்தக்க இழப்பீடு தொகைகள் குறித்து ஆராய வேண்டியது இந்த தீா்ப்பாயம் முடிவு காண்கிறது.

(ஆ) Smt. Sarla Verma & Ors. vs. Delhi Transport Corporation & Anr. (2009) 4 MLJ (SC) 997 என்ற தீா்ப்பினில் பத்தி 9ன்படி காலமான நபரின் வயது மற்றும் வருமானத்தை நிா்ணயம் செய்ய வேண்டியது அவசியம் என இந்தத் தீா்ப்பாயம் கருதுகிறது.

(இ) **காலமான நபரின் வயது**

விபத்து சமயத்தில் காலமான 1ம் மனுதாரரின் வயது குறித்து ஆராய்கையில் ம.சா.ஆ.15 காலமானவரின் ஆதாா் அட்டை நகலினை பரிசீலனை செய்ததில் காலமானவரின் வயது விபத்து சமயத்தில் 62 என்று அறிய முடிகிறது. எனவே ம.சா.ஆ.15ன் படி விபத்து சமயத்தில் காலமானவரின் வயது 62 என்று இத்தீா்ப்பாயம் முடிவு காண்கிறது.

பெருக்கீடுகள்

(ஈ) **மாதவருமானம்**

காலமான 1ம் மனுதாரா் விபத்து சமயத்தில் சொந்தமாக பலசரக்கு மற்றும் மளிகை கடை வைத்து வியாபாரம் செய்து மாதம் ரூ.30,000/- சம்பாதித்து வந்ததாக ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளாா். அதற்காக மனுதாரா்கள் தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இருந்தபோதிலும் காலமான நபா் தான் உயிரோடு இருந்திருந்தால் ஏதோ ஒரு வேலை பாா்த்து மாத வருமானம் ஈட்டி இருக்கக்கூடும் என்பதால் அவருடைய வயதையும் கருத்தில்கொண்டு குறைந்தபட்ச வருமானமாக ரூ.15,000/- எடுத்துக்கொள்ளலாம் என இத்தீா்ப்பாயம் தீா்மானிக்கிறது.

SUJATHA Digitally signed by SUJATHA

(உ) **எதிர்கால வரும்படி (Future Prospectus)**

காலமானவரின் வயது 62 என்றும், மாத வருமானம் ரூ.15,000/- என்றும் நிர்ணயம் செய்துள்ளதால் பிரணாய் சேத்தி முன் தீர்ப்பு படி காலமானவரின் வயதிற்கு கூடுதல் எதிர்கால வருமானம் கிடையாது என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. மேற்படி தொகையினை ஒரு ஆண்டிற்கு கணக்கிட்டால் ரூ.1,80,000/- (ரூ.15,000/- X 12) வருகிறது.

(ஊ) **கழிவுகள் ((Deductions)**

மனுவின் படி காலமானவருக்கு விபத்து சமயத்தில் இரண்டு மகள் மற்றும் இரண்டு மகன்கள் என 4 வாரிசுகள் இருந்ததாக அறிய முடிகிறது. எனவே, ரேஷ்மா குமாரி முன்தீர்ப்பு படி காலமானவரின் ஆண்டு வருமானத்தில் 1/4 பங்கினை கழிவாக எடுத்துக்கொள்ளலாம் என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

ஆண்டு வருமானம் ரூ.1,80,000/-

1/4 கழிவு ரூ.45,000/-

மேற்கண்ட ஆய்விலிருந்து காலமானவா் தனது குடும்பத்திற்கு ஆண்டிற்கு ரூ.1,35,000/-யை கொடுத்திருப்பார் என்று இத்தீர்ப்பாயம் முடிவு காண்கிறது.

(எ) **பெருக்கீடுகள்**

காலமானவரின் வயது 62 என நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதால் சரளா வர்மா முன்தீர்ப்பின் படி அவருக்கு 7 பெருக்கீட்டினை எடுத்துக்கொள்ளலாம் என இத்தீர்ப்பாயம் கருதுகிறது.

(ஏ) **சார்ந்தோர் இழப்பு (Loss of Dependency**

ஒரு ஆண்டிற்கு குடும்பத்திற்கு கொடுக்கப்படும் தொகையை பெருக்கீட்டின்படி பெருக்கும்போது சார்ந்தோர் இழப்பு தொகை கிடைக்கும் அதன்படி காலமானவர் ஒரு வருடத்திற்கு குடும்பத்திற்கு கொடுக்கும் ரூ.1,35,000/-ஐ பெருக்கீடு 7உடன் பெருக்கினால் கீழ்க்கண்ட தொகை சார்ந்தோர் இழப்பீடாக கிடைக்கும் என இந்தத் தீர்ப்பாயம் கருதுகிறது.

வயது = 62

SUJATHA Digitally signed by SUJATHA

பெருக்கீடு = 7

ஒரு வருடத்திற்கு கொடுக்கும் தொகை ரூ.1,35,000/-

சார்ந்தோர் இழப்பு ரூ.9,45,000/– (ரூ.1,35,000/- X 7)

(ஐ) **உறவு இழப்பு, பதவி இழப்பு, மற்றும் ஈமச்சடங்கு இழப்பு**

Loss of Consortium, Loss of Estate and Funeral Expenses

நமது மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிரனாய் சேத்தி முன்தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளபடி 2 முதல் 4ம் மனுதாரர்கள் காலமானவரின் மக்கள் என்பதால் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பு பணத்தால் ஈடு செய்ய இயலாது என்பதால் பெற்றோர் உறவு இழப்பிற்காக அவர்களுக்கு தலா ரூ.40,000/- வழங்கி மொத்தம் ரூ.1,60,000/- மும், சொத்து இழப்பிற்காக ரூ.15,000/- மும், ஈமச்சடங்கிற்காக ரூ.15,000/- மும் வழங்குவது நீதியின்பால் சரியாக இருக்கும் என்று இந்தத் தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

ஓ. மருத்துவமனை சிகிச்சை மற்றும் மருந்துகள் தொடர்பான செலவுகள்

மனுதாரர் தரப்பில் மருத்துவம் மற்றும் சிகிச்சை தொடர்பான செலவினங்களுக்காக மருத்தவ பில்கள் ம.சா.ஆ.9 முதல் ம.சா.ஆ12 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன. எனவே, மேற்கண்ட ம.சா.ஆ.9 முதல் ம.சா.ஆ12ஐ பரிசீலனை செய்ததில் மருத்துவமனை சிகிச்சை, மருந்துகள் மற்றும் போக்குவரத்து தொடர்பான செலவுகளுக்கு ரூ.50,608/- இழப்பீடாக வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக மனுதாரர்கள் கீழ்க்கண்ட தலைப்பில் கீழ்க்கண்ட தொகைகளை இழப்பீடாக பெறத் தகுதியுடையவர்கள் என இந்தத் தீர்ப்பாயம் கருதுகிறது.

சார்ந்தோர் இழப்பு	=	ரூ. 9,45,000/-
உறவு இழப்பு	=	ரூ. 1,60,000/-
சொத்து இழப்பு	=	ரூ. 15,000/-

SUJATHA Digitally signed by SUJATHA

ஈமச்சடங்கு செலவு	=	ரூ. 15,000/-
மருத்துவமனை சிகிச்சை மற்றும் மருந்துகள் தொடர்பான செலவுகள்	=	ரூ. 50,608/-
		=========
மொத்தம்	=	ரூ.11,85,608/-
		=========

மேற்கண்ட விவாதங்களிலிருந்து மனுதாரருக்கு மொத்தம் ரூ.11,85,608/- என்பதை முழுமையாக **ரூ.11,85,700/-** இழப்பீட்டுத் தொகையாக கிடைக்கக்கூடியது என்று இந்தத் தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

9. முடிவில் இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்களுக்கான மொத்த சரியான இழப்பீடாக **ரூ.11,85,700/-** வழங்க வேண்டும் என்பதாக இத்தீர்ப்பாயம் நிர்ணயித்து கீழ்க்கண்டவாறு உத்தரவிடுகிறது.

a) 1ம் எதிர்மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரரும் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு விபத்து இழப்பீட்டு தொகை கொடுக்க கடமைப்பட்டவர்களாக உள்ள நிலையில், விபத்து ஏற்படுத்திய 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற முறையில் மேற்படி இழப்பீட்டு தொகையினை 2ம் எதிர்மனுதாரர் கொடுக்க பொறுப்பானவர் என தீர்மானித்துள்ளதால், இழப்பீடு தொகை **ரூ.11,85,700/-** மற்றும் அதற்கான பின் வட்டி மனு தாக்கல் செய்த நாளிலிருந்து தொகை முழுவதும் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யும் காலம் வரை 7.5 சதவீத ஆண்டு வட்டியுடன் மனு தள்ளுபடி ஏதேனும் செய்யப்பட்டிருப்பின் அந்த காலத்தை கழித்துக் கொண்டு 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. மொத்த இழப்பீட்டுத் தொகையும், 2 முதல் 5ம் மனுதாரர்களுக்கு அனைவருக்கும் சரிசமமாக கிடைக்ககூடியது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

b) 2ம் எதிர்மனுதாரர், மேற்படி இழப்பீடுத் தொகையை வங்கி கணக்கு எண் Indian Bank, High Court Building Branch, A/c No.7103261207, IFSC Code No.IDIB000M157, MICR No.600019117ல் NEFT or RTGSன் கீழ் நேரடியாக இவ்வுத்தரவு பிறப்பித்த இரண்டு

SUJATHA Digitally signed by SUJATHA

மாத காலத்திற்கு வைப்பீடு செய்யவும், மாண்புமிகு மதராஸ் உயர்நீதிமன்றம் CMA No.428/2016 dated 11.03.2016ல் பத்தி 11 (IX) ல் குறிப்பிட்டுள்ள உத்தரவின் படி அது குறித்த தகவலை இத்தீர்ப்பாயத்திற்கு உடனடியாக தெரிவிக்கவும், அவ்வாறு வைப்பீடு செய்த நடவடிக்கை குறித்த ஆவண நகலினை மனுதாரருக்கோ அல்லது அவரது வழக்கறிஞருக்கோ நேரடியாக வழங்கவும் உத்தரவிடப்படுகிறது.

c) மனுதாரர்களின் இழப்பீட்டு தொகை மற்றும் அதற்கான வட்டியை உடனடியாக மனுதாரர்களின் வங்கி கணக்கு எண்ணிற்கு நேரடியாக மாறுதல் செய்ய உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்களின் வங்கி கணக்கு எண் மற்றும் ஆதார் விவரங்கள் :-

2ம் மனுதாரரின் பெயர் - Rajalakshmi

வங்கி பெயம் மற்றும் கிளை	வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code	ஆதார் அட்டை விவரம்
Punjab National Bank, Madras	Ac No: 02862001000017153 IFSC : PUNB0028620	8389 1360 2878

3ம் மனுதாரரின் பெயர் - Dhanalakshmi

வங்கி பெயம் மற்றும் கிளை	வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code	ஆதார் அட்டை விவரம்
Punjab National Bank, Madras	Ac No: 02862001000017490 IFSC : PUNB0028620	9492 1832 2239

4ம் மனுதாரரின் பெயர் - Manikandan

வங்கி பெயம் மற்றும் கிளை	வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code	ஆதார் அட்டை விவரம்
Punjab National Bank, Madras	Ac No: 02862001000016701 IFSC : PUNB0028620	9773 9140 7972

5ம் மனுதாரரின் பெயர் - Saravanan

வங்கி பெயம் மற்றும் கிளை	வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code	ஆதார் அட்டை விவரம்
Punjab National Bank, Madras	Ac No: 02862001000016659 IFSC : PUNB0028620	2851 0107 4109

SUJATHA Digitally signed by SUJATHA

d) இழப்பீட்டுத்தொகை கோரிய மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் ரூ.373/-. மனுதாரர்கள் செலுத்த வேண்டிய மொத்த நீதிமன்ற கட்டணம் ரூ.11,229.50/-. இழப்பீட்டுத்தொகை கோரிய மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் போக மீதமுள்ள ரூ.10,856.5/-ஐ நீதிமன்றக்கட்டணமாக செலுத்த உத்தரவிடப்படுகிறது.

e) வழக்கறிஞருக்குரிய கட்டணமாக ரூ.18,857/- நிர்ணயிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து=தட்டச்சருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUJATHA Digitally signed by SUJATHA

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:-

ம.சா.1 - திருமதி. தனலட்சுமி
ம.சா.2 - திரு. டாக்டர். வினோத்

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-

ம.சா.ஆ.1	முதல் தகவல் அறிக்கை நகல்
ம.சா.ஆ.2	இறுதி அறிக்கை நகல்_
ம.சா.ஆ.3	விபத்து பதிவேடு நகல்
ம.சா.ஆ.4	வேளம்மாள் டிைக்கல் கல்லூரி மருத்துவமனை சிகிச்சை ஆவணம்
ம.சா.ஆ.5	சிடி ஸ்கேன் ரிப்போர்ட்
ம.சா.ஆ.6	ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் வெளிநோயாளிக்கான நோட்டு புத்தகம்
ம.சா.ஆ.7	MRI ஸ்கேன் அறிக்கை

ம.சா.ஆ.8	புறநோயாளிக்கான சீட்டு மற்றும் ஆம்புலன்ஸ் பில்
ம.சா.ஆ.9	உள்நோயாளிக்கான மருத்துவ பில்
ம.சா.ஆ.10	வெளிநோயாளிக்கான பில்
ம.சா.ஆ.11	பார்மஸி பில்கள்
ம.சா.ஆ.12	மருத்துவ பில்கள்
ம.சா.ஆ.13	வாரிசு சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.14	1ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.15	2ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.16	3ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.17	4ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.18	5ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.19	2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல்
ம.சா.ஆ.20	3ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல்
ம.சா.ஆ.21	4ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல்
ம.சா.ஆ.22	5ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல்
ம.சா.ஆ.23	எக்ஸ்ரேஸ்
ம.சா.ஆ.24	ஸ்கேன்ஸ்
ம.சா.ஆ.25	சென்துார்பாண்டியன் என்பவரின் கேஸ் சீட் நகல்

எதிர்மனுதாரர்கள் சாட்சிகள் :- இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை

நீதிமன்ற தரப்பு சான்றாவணங்கள்:-_ இல்லை

SUJATHA Digitally signed by SUJATHA

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

மற்ற விவரங்கள்

மனு தாக்கல் செய்த தேதி	29.06.2021
தீர்ப்பு நாள்	04.02.2026
மனுவில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை	ரூ.43,00,000/-
தீர்ப்பாயம் வழங்கியுள்ள இழப்பீட்டு தொகை	ரூ.11,85,700/-
மொத்த நீதிமன்ற கட்டணம்	ரூ. 11,229.50/-
ஏற்கனவே செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம்	ரூ. 373/-
மீதி செலுத்து வேண்டிய நீதிமன்ற கட்டணம்	ரூ. 10,856.50/-

செலவு பட்டியல்

செலவு விவரங்கள்	**தொகை**
விருது தொகைக்கான முத்திரை வரி	ரூ. 11,229.50
வக்காலத்து நாமா	ரூ. 5.00
சம்மன் பேட்டா தயாரித்தற்கான கட்டணம்	ரூ. 40.00
வழக்கறிஞர் கட்டணம்	ரூ. 18,857/-
மொத்தம்	ரூ.30,131.50/-

SUJATHA Digitally signed by SUJATHA

மோட்டார் வாகன விபத்துகள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

Additional court fee paid, MPSR.No..................; dated................

(Spl-1, SSJ)